SAMPLE QUESTION PAPER

# TAMIL
# PART II - SECOND LANGUAGE

## Class - XII

Government of Kerala
Department of Education

Prepared by
State Council of Educational Research and Training (SCERT), Kerala

2015

# மதிப்பீட்டு அணுகுமுறை 2015

## மேனிலைப்பள்ளி - தமிழ்

2013-இல் நடந்த கேரளப் பள்ளிப் பாடஏற்பாட்டு மாற்றத்தின் அடிப்படையில் மேனிலை முதலாமாண்டு வகுப்பில் பாடநூல் வெளிவந்தது. காலத்திற்கு ஏற்பப் பாடநூலில் வந்த மாற்றங்கள் மதிப்பீட்டு அணுகுமுறையிலும் பிரதிபலிப்பதுண்டு. மாணவர்களின் கற்றல் செயல்முறையை மேம்படுத்துவதற்காகவும் கற்றல் முன்னேற்றத்தைக் கண்டடைவதற்காகவும் உண்மையான மதிப்பீட்டு அணுகுமுறை தேவையாகும். மாணவர்களின் கற்றல் அடைவுகளின் அடிப்படையில் எழுத்துத் தேர்வு அமைதல் வேண்டும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள வலைச்சட்டமே இது.

தரமான வினாக்கள் குறையில்லாத தேர்வுக்கு ஆதாரமாகக் கருதப்படுகின்றன. வேறுபட்ட கற்றல் அணுகுமுறையையும் சிந்தனை வளர்ச்சியையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் வினாக்களை அமைக்க வேண்டும். பின்தங்கிய மாணவர்களுக்கும் புரியும் நிலையில் வினாக்கள் அமைதல் வேண்டும்.

அதனால் வினாக்கள் தயாராக்குவதற்குப் பொதுவான ஒரு வலைச்சட்டம் அவசியமாகும். வினாத்தாள் தயாராக்கு வதற்கான விதிமுறைகள் நான்கு.

1. முன்னேற்பாடு
2. வினாத்தாளின் தரம்
3. வினாத்தாள் தயார் செய்தல்
4. வினாத்தாளின் அமைப்பு

**முன்னேற்பாடு**

1. மாறிய பாடஏற்பாட்டு அணுகுமுறைகளையும் பாடநூலையும் அறிமுகம் செய்யவேண்டும்.
2. பாடநூலின் வெவ்வேறு அலகுகளின் கற்றல் அடைவுகளைக் கருத்தில் கொள்ளவேண்டும்.
3. வெவ்வேறு நிலையிலான சிந்தனைச் செயல்பாடுகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.
4. வினாத்தாள்கள் வலைச்சட்ட அடிப்படையிலானதாக அமையவேண்டும்.
5. ஒவ்வொரு அலகுக்கும் தனித்தனியான வினாத்தொகுப்புகள் தயாராக்கவேண்டும்.

**வினாக்களின் தரம்**

1. வினா மொழி தெளிவாகவும் எளிமையாகவும் அமைதல் வேண்டும்.
2. புறவய வினாக்கள்
   அ. பலவுள் தேர்வு
   ஆ. பொருத்துதல் போல்வன
3. வினாக்கள் உயர்ந்த சிந்தனைத் திறன்களின் அடிப்படையில் வேண்டும்.
4. விடை எழுதுவதற்கான நேரம் சிந்தனைச் செயல்பாட்டிற்கு ஏற்ப அமையவேண்டும்.
5. விடைகளின் அளவைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.
6. கற்றலுக்கு உகந்ததாக வினாக்கள் அமையவேண்டும்.
7. வினாக்கள், கற்றல் அடைவுகளின் அடிப்படையில் அமையவேண்டும்.
8. வினாக்கள் ஒரு சொல், சிறுகுறிப்பு, கட்டுரை என்றிவ்வாறு பல்வேறு விடைகளுக்கான மாதிரிகளில் அமையவேண்டும்.
9. வினாக்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் அமையவேண்டும்.
10. ஒன்றோ, அதற்கு மேற்பட்ட அலகுகளை இணைத்தோ, தேவையான கற்றல் அடைவுகளுக்காக வினாக்களை அமைக்கலாம்.
11. மொழித்திறன், படைப்புத்திறன், பாடப்பகுதி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதாக வினாக்கள் அமையவேண்டும்.

12. மாற்றுத்திறனாளி மாணவர்களையும் கருத்தில்கொண்டு வினாக்கள் அமையவேண்டும்.

13. கட்டுரை வினாக்கள், விடை எழுதும் அளவில் தெளிவுடையனவாக இருக்கவேண்டும்.

14. ஜாதி, மத, பால் உணர்வுகளைக் காயப்படுத்தும் வினாக்களைக் கட்டாயமாகத் தவிர்க்கவேண்டும்.

**வினாத்தாள் தயார் செய்தல்**

1. வினாத்தாள் வடிவமைக்கும்போது, உள்ளடக்கம், கற்றல் அடைவு இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பல்வேறுபட்ட வினாக்களையும் சேர்க்க வேண்டும்.

2. வினாத்தாள் வடிவமைப்பின் அடிப்படையில்தான் வினாக்களைத் தயாரிக்க வேண்டும்.

3. வினாத்தாள்களுடன் விடைகளின் குறிப்பும் கருத்துத் திறனும் கொடுக்கப்படவேண்டும்.

4. எதிர்பார்க்கும் சிந்தனைத் திறன்கள் எவை எவை என மதிப்பீட்டுக் குறிப்பில் கொடுக்கப்பட வேண்டும்.

5. கருத்து அடைவுக்கு 60%, கருத்துப் பயனாக்கத்துக்கு 40% என்ற நிலையில் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்.

6. புறவயவினா 15% முதல் 20%, கட்டுரைக்கு 30% என்னும் அளவில் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

7. கட்டுரை வினாவிற்கு அதிகபட்சமாகக் கொடுக்கவேண்டிய மதிப்பெண் மொத்த மதிப்பெண்ணின் 10% ஆயிருத்தல் வேண்டும்.

8. வினாக்களைப் புரிந்து விடை எழுதத் தேவையான நேரத்தை அடிப்படையாகக் கொண்டே ஒவ்வொரு வினாவும் உருவாக்கப்பட வேண்டும்.

9. 80 மதிப்பெண் வினாக்களுக்கு 2½ மணி தேர்வு நேரமும் 15 மணித்துளிகள் ஆயத்த நேரமுமாகும்.

**வினாத்தாளின் அமைப்பு**

1. வினாத்தாளின் முகப்பில் பொதுக்குறிப்புகள் கொடுக்கவேண்டும்.

2. ஒவ்வொரு வினாவுடனும் அந்த அந்த வினாவுக்கான குறிப்புகள் தேவையானால் கொடுக்கவேண்டும்.

3. கட்டுரை வினாக்களுக்கு உள்தெரிவு கொடுக்க வேண்டும். 30% மட்டுமே கட்டுரை அமைய வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள குறிப்புகளை மனத்தில்கொண்டு மாணவர்களின் சார்பில்நின்று மட்டுமே வினாக்களை உருவாக்கவேண்டும்.

# கற்றல் அடைவுகள் (LOs)
# தமிழ்

## 1. வயலும் வாழ்வும்

1.1 திருக்குறள், முக்கூடற்பள்ளு கூறும் வேளாண்மையின் மகத்துவங்களைக் குறித்து கட்டுரை எழுதுகின்றனர்.

1.2 இலக்கியங்கள் கூறும் வேளாண் தொழிலின் மகத்துவம் அறிந்து கட்டுரை எழுதுகிறார்கள்.

1.3 பாடல்களை இரசித்துக் கவிதைக்கு நயம் பாராட்டிக் குறிப்புகள் எழுது கின்றனர்.

1.4 வேளாண் தொடர்பான படைப்பிலக்கியங்களில் வெளிப்படும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து குறிப்புகள் எழுதுகிறார்கள்.

1.5 வேளாண் பிரச்சினைகளைக் கண்டறிய அனுபவங்களைச் சேகரிக்கிறார்கள்.

1.6 பரம்பரையான விவசாய முறைக்கும் இன்றைய விவசாய முறைக்கு மிடை யேயான ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பீட்டுக் குறிப்புகளாக எழுதுதல்.

1.7 வேளாண் தொடர்பான பாடல்கள், உரைகள், கவிதைகளைப் படித்து விமர்சனக் குறிப்பு எழுதுவதுடன் சொந்தமாகக் கவிதை எழுதுகின்றனர்.

1.8 செய்திகள். தொகுத்து வேளாண் மலர் தயாரிக்கிறார்கள்.

1.9 வேளாண்மை தொடர்பான கண் காட்சி நடத்தி மலர் வெளியிடு கின்றனர்.

## 2. கலையும் பண்பாடும்

2.1 நாட்டார் வழக்காறுகளில் அமைந்த பண்பாட்டுக்கூறுகளை அறிந்து வெளியிடுகின்றனர்.

2.2 செவ்விலக்கியப் பண்பாட்டுடன் நாட்டார் இலக்கியப் பண்பாட் டினை ஒப்பிட்டுப் பேசுகிறார்கள்.

2.3 கதை, கட்டுரைப் பாடல்கள் போன் றவற்றை வாசித்து உணர்ந்து அவற்றின் அடிப்படையில் சிறு வினாக்கள் தயாரிக்கின்றனர்.

2.4 தமிழகப் பண்பாட்டுடன் கேரள சமகாலப் பண்பாட்டை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் குறிப்புகள் எழுதுகிறார்கள்.

2.5 கலைகளில் சிறந்த சான்றோர்களை நேர்காணல் நடத்திக் கலைகள் குறித்த செய்திகளைத் தொகு கின்றனர்.

2.6 இசை வடிவம் அமைந்த நாடகத் தினை வசனவடிவில் வடிவமாற்றம் செய்கின்றனர். நடித்து வெளியிடு கின்றனர்.

2.7 கலைஞர்களின் வளர்ச்சிப் படி களை உற்றுநோக்கிப் பாராட் டுரை தயார்செய்கிறார்கள்.

2.8 கலைகள் பண்பாடு போன்றவை தொடர்பான நாடகங்கள் குறும் படங்கள் தயாரித்து வெளியிடு கின்றனர்.

## 3. அறிவியல் தமிழ்

3.1 பண்டைய இலக்கியங்களில் காணப் படும் அறிவியல் செய்திகளைத் தொகுத்து எழுதுகின்றனர்.

3.2 அறிவியல் கருத்தரங்கு நிகழ்வுகளில் பங்குபெற்று உரையாற்றக் குறிப்புகள் தயாரிக்கின்றனர்.

3.3 கவிதைகளை இரசித்து நயம் பாரட்டவும், அதைப் போன்ற ஒன்றைப் படைக்கவும் செய்கிறார்கள்.

3.4 இதழ்களில் வெளியிடும் வண்ணம் விமர்சனக் கட்டுரைகள் எழுது கின்றனர்.

3.5 தலைப்புகளுக்குத் தகுந்த செய்தி களைக் குறிப்பெடுக்கும் ஆற்றலும், பேச்சுத்திறனும் பெறுகின்றனர்.

3.6 பல்வேறு இலக்கிய மொழிநடைகள் அறிந்து வெளிப்படுத்துகின்றனர்.

3.7 பிறமொழிச் சொற்களுக்கு இணையான புதிய சொற்களைத் தொகுத்துத் தலைச்சொல் அகராதி தயாரிக் கின்றனர்.

3.8 அறிவியல் தமிழின் சிறப்பைப் பொது மக்களுக்கு உணர்த்திட விழிப்புணர்வு முகாம்கள் நடத்துகின்றனர். கருத் தரங்கம் நடத்துகின்றனர்.

## 4. என்றும் நலமுடன்

4.1 உணவு தொடர்பான பழமொழிகள், திருக்குறள் போன்றவற்றைத் தொகுக்கிறார்கள்.

4.2 உணவின் முக்கியத்துவம் குறித்தும், இன்றைய உணவுப் பழக்கம் குறித்தும் குறிப்புகள் எழுதுகிறார் கள்.

4.3 மாறிவரும் உணவுப் பழக்கவழக் கங்கள் பல நோய்கள் வருவதற்குக் காரணமாகின்றன என்பதை உணர்ந்து கட்டுரை எழுதுகிறார்கள்.

4.4 உடற்பயிற்சியின் அவசியத்தை அறிந்து விழிப்புணர்வு வாக்கியங்கள் தயார்செய்கிறார்கள்.

4.5 உடற்பயிற்சியின் அவசியத்தை உணர்த்தும் சொற்பொழிவு உரை தயாரிக்கிறார்கள்.

4.6 உடற்பயிற்சியின் சிறப்புகளையும் அவசியத்தையும் அறிந்து பத்திரிகைச் செய்தி உருவாக்குகிறார் கள்.

4.7 யோக குறித்தும் அதன் நன்மைகள் குறித்தும் அறிந்து ஈடுபடுகிறார்கள்.

4.8 நாட்டுப்புற விளையாட்டு குறித்த விளக்கக் குறிப்பு தயாரிக்கிறார்கள். நிகழ்த்துகிறார்கள்.

4.9 விளையாட்டில் சிறந்த வீரர்கள் குறித்த படத்தொகுப்பு மற்றும் செய்தித்தொகுப்பு உருவாக்கு கிறார்கள்.

4.10 உடல் நலனின் சிறப்புகளையும் அதனை வருமுன் காத்தலோடு பாதுகாக்க வேண்டும் என்பதனை உணர்ந்திடும் விதத்தில் விழிப்புணர்வு முகாம் நடத்துகின்றார்கள்.

## 5. சமூக சீர்திருத்தம்

5.1 சமூகச் சீர்திருத்தத்தைப் பற்றி விவாதிக்கின்றனர். அதில் ஈடுபட்ட பெரியோர்களின் செயல்களைத் தொகுத்து வெளியிடுகின்றனர்.

5.2 சமூகச் சீர்திருத்தத்தின் தேவையைத் தமக்குக் கிடைத்த செய்திகள், அனுபவங்கள் வாயிலாக விமர்சனக் கட்டுரையாக வெளியிடுகின்றனர்.

5.3 ஒடுக்கப்பட்டவர்களின் அவலநிலையை விமர்சித்தும் ஆய்வு செய்தும் கட்டுரை எழுதுகின்றனர்.

5.4 சமூக ஏற்றத்தாழ்வுகள் குறித்து விழிப்புணர்வு சொற்பொழிவு ஆற்றுகின்றனர்.

5.5 கேரளச் சமூகச் சீர்திருத்த வாதிகளைக் குறித்தான படங்கள், தகவல்கள் சேகரித்து விளக்கத் தொகுப்பு உருவாக்கு கிறார்கள்.

5.6 கவிதைகள் வெளிப்பட்ட சூழலைப்புரிந்து நயம் பாராட்டுகின்றனர்.

5.7 மறுமலர்ச்சி நாயகர்களைப் பற்றிய செய்திகள் சேகரிக் கிறார்கள், கட்டுரை எழுது கிறார்கள்.

5.8 பாடப்பகுதி சுட்டிக்காட்டும் நற்கருத்துகளை உள்வாங்கி செயல்படுகிறார்கள்.

# வருடப் பணிப்பகிர்வு
## வகுப்பு : 12 (தமிழ்)
## 2015 - 2016
## கற்பிக்கப்பட வேண்டிய அலகுகள்

| Term | Month | Units |
|---|---|---|
| முதல் பருவம் | June | அலகு 1 வயலும் வாழ்வும்<br>• ஏறுபூட்டி<br>• நம்ம நிலம்<br>• பசும் பூமி |
| | July | அலகு 2 கலையும் பண்பாடும்<br>• நாட்டார் பண்பாடு<br>• செவ்விலக்கியப் பண்பாடு |
| | August | • கூத்துக்கலை<br>முதல் நிலை மதிப்பீடு |
| இரண்டாம் பருவம் | Septermber | அலகு 3 அறிவியல் தமிழ்<br>• பழந்தமிழ்<br>• இளந்தமிழ் |
| | October | • வளர்தமிழ்<br>அலகு 4 என்றும் நலமுடன்<br>• நலம் நாடி |
| | November | • சுவரிருந்தால்<br>• ஆடுவோம் பாடுவோம் |
| | December | அலகு 5 சமூகச் சீர்திருத்தம்<br>• சுவடுகள்<br>இரண்டாம் நிலை மதிப்பீடு |
| மூன்றாம் பருவம் | January | • புத்துணர்வு<br>• எழுச்சி |
| | February | மீள்பார்வை |
| | March | ஆண்டு இறுதி மதிப்பீடு |

# தமிழ் - வகுப்பு XII முழு ஆண்டுத் தேர்வு 2016

## PART - II

## (TAMIL - STD. XII - ANNUAL EXAMINATION 2016)

## மாதிரி வினாத்தாள் வடிவமைப்பு (DESIGN OF QUESTION PAPER)

1. பாடப் பொருளுக்கும் கற்றல் அடைவுகளுக்குமான முக்கியத்துவம்:

**(Weightage to Content & Learning Outcomes)**

| வரிசை எண் | அலகு | கற்றல் அடைவுகள் | மதிப்பெண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வயலும் வாழ்வும் | 1.1, 1.2, 1.5, 1.4 | 15 | 18.75 |
| 2. | கலையும் பண்பாடும் | 2.1,2.2, 2.5, 2.8, 2.3 | 17 | 21.25 |
| 3. | அறிவியல் தமிழ் | 3.5, 3.6, 3.2, 3.4 | 16 | 20 |
| 4. | என்றும் நலமுடன் | 4.3, 4.6, 4.2, 4.3 | 15 | 18,75 |
| 5. | சமூகச்சீர்திருத்தம் | 5.1, 5.2, 5.6, 5.5 | 17 | 21.25 |
| | **மொத்தம்** | | **80** | **100.00** |

2. சிந்தனைத்திறனுக்கான முக்கியத்துவம்

**(Weightage to Thinking Skills)**

| வரிசை எண் | சிந்தனைத்திறன் | மதிப்பெண் | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | கருத்து அடைவு (Conceptual attainment) | 48 | 60 |
| 2. | கருத்துப் பயனாக்கம் (Conceptual generation) | 32 | 40 |
| | **மொத்தம்** | **80** | **100** |

3. வினா வகைக்கான முக்கியத்துவம்

**(Weightage to Form of Questions)**

| வரிசை எண் | வினாவகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | புறவய வினாக்கள் (Objective type) | 14 | 14 | 17.5 |
| 2. | குறு வினாக்கள் (Short answer type) | 11 | 42 | 52.5 |
| 3. | கட்டுரை வினாக்கள் (Essay type) | 3 | 24 | 30 |
| | **மொத்தம்** | **28** | **80** | **100** |

4. **வினாத்தாள் அமைப்புச் சட்டகம்**

**(Blueprint)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வகுப்பு | : | XII | மதிப்பெண் | : | 80 |
| பாடம் | : | சிறப்புத் தமிழ் | நேரம் | : | 2 1/2 மணி |

| சிந்தனைத் திறன் / பாடப் பொருள் | கருத்து அடைவுக்கான சிந்தனைத் திறன் | | | கருத்துப் பயனாக் கத்திற்கான சிந்தனைத் திறன் | | | மதிப் பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| | புறவய வினா | குறு வினா | கட்டுரை வினா | புறவய வினா | குறு வினா | கட்டுரை வினா | |
| 1. வயலும் வாழ்வும் | 1(1) | 4(1) 5(1) | | 1(1)1(1)1(1) | | | |
| 2. கலையும் பண்பாடும் | 1(1) | 3(1) 4(1) | 8(1) | 2(1) | | | |
| 3. அறிவியல் தமிழ் | 1(1) | | | 1(1) | 3(1) 4(1) | | |
| 4. என்றும் நலமுடன் | 1(1) | 5(1) | | 2(2) 1(1) | 3(1) 4(1) | | |
| 5. சமூகச்சீர்திருத்தம் | 1(1) | 3(2) | 8(1) | | | 8(1) | |
| **மொத்தம்** | **5(5)** | **27(7)** | **16(2)** | **9(9)** | **14(4)** | **8(1)** | |

குறிப்பு :

வினாக்களின் எண்ணிக்கை, அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ளது

# மாதிரி வினாத்தாள் (MODEL QUESTION PAPER)

# பகுதி II - தமிழ் (PART II - TAMIL - Second Language)

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு | : XII | மதிப்பெண் | : 80 |
| பதிவு எண் | : | நேரம் | : 2 ½ மணி |
| பெயர் | : | சிந்தனை நேரம் | : 1/4 மணி |

## General Instructions to Candidates

1. There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time 2½ hrs.
2. You are neither allowed to write your answers nor to discuss anything with others during the 'Cool off time'.
3. Use the 'Cool off time' to get familiar with questions and to plan your answers.
4. Read questions carefully before answering.
5. All questions are compulsory and only internal choice is allowed.

## பொதுவழி முறைகள்

1. விடை எழுதத் தந்துள்ள 2½ மணி நேரத்திற்கு மேலாகத் தொடக்கத்தில் 15 நிமிடங்கள் சிந்தனை நேரமாகத் (Cool off time) தரப்பட்டுள்ளது. இந்நேரத்தில் விடை எழுதவோ விவாதிக்கவோ கூடாது.
2. இந்நேரத்தை வினாக்களைப் படித்துப் புரிந்துகொள்ளவும் விடையைத் திட்டமிடவும் பயன்படுத்த வேண்டும்.
3. விடை எழுதும் முன்பு வினாக்களைக் கவனமாகப் படிக்கவும்.
4. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவேண்டும்.
5. சில வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி விடை எழுதுக.

## 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக

10 X 1 = 10

1. குழந்தைத் தொழிலாளர்களைப் பாதுகாக்கப் போராடி நோபல் பரிசு பெற்றவர் ..........................

   அ. ஈ.வெ. ரா  ஆ. அய்யங்காளி

   இ. காந்திஜி  ஈ. கைலாஷ் சத்தியார்த்தி

2. மீதூண் விரும்பேல் என்பதன் பொருள்

   அ. உணவை விரும்பக்கூடாது  ஆ. சுவையான உணவை விரும்ப வேண்டும்

   இ. அளவோடு உண்ண வேண்டும்  ஈ சத்துள்ள உணவை விரும்ப வேண்டும்

3. சோழநாடு சோறுடைத்து என்று கூறக் காரணம்

   அ. வயல்வளம்  ஆ. கடல்வளம்

   இ. வனவளம்  ஈ. மலைவளம்

4. 'மேல் காற்று' என்னும் தொடர் இவ்வாறு பிரியும் ....................

   அ. மென் + காற்று  ஆ. மேற்கு + காற்று

   இ. மென்மை + காற்று  ஈ. மேல் + காற்று

5. "வேற்றுமையால் விளைகின்ற தீமை தன்னை விரைவில் நாம் வேரொடு சாய்க்க வேண்டும்". இவ்வாறு கூறியவர்.

   அ. எம். சாலன்  ஆ. நாராயணகுரு

   இ. சுரதா  ஈ. பொன்னீலன்

6. பரம்பரை விவசாயம் அழிவதற்குக் காரணம்

   அ. தொழில் புரட்சி  ஆ. அறிவியல் தொழில் நுட்பம்

   இ. உலகமயமாதல்  ஈ. தாராளமயமாக்கல்.

7. தொழில் செய்யும் போது பாடப்படும் பாடல் வகை

   அ. ஒப்பாரி  ஆ. தாலாட்டு

   இ. விளையாட்டு  ஈ. ஏற்றப்பாட்டு

8. 'புள்' என்ற சொல்லின் பொருள்

   அ. விலங்கு  ஆ. மரம்

   இ. பறவை  ஈ. உயிரினம்

9. முன் உண்டது செரித்தபின் உண்ணாதவருக்குத் தேவைப்படுவது.

   அ. மருந்து  ஆ. உடற்பயிற்சி

   இ. உணவு  ஈ. தண்ணீர்

10. தெருக்கூத்தின் செவ்வியல் வடிவம்

    அ. கூத்து  ஆ. குரவைக்கூத்து

    இ. நாடகம்  ஈ. கதைப்பாடல்

## 11 முதல் 14 வரையுள்ளவற்றைச் சரியாகப் பொருத்துக

4 X 1 = 4

| | | |
|---|---|---|
| 11. ஏர் எழுபது | - | அள்ளமுடியாமல் சிதறிக் கிடக்கின்றன |
| 12. நம்மநிலம் | - | முத்து முத்துச்சம்பா |
| 13. பொங்கலோ பொங்கல் | - | விஷமருந்துகளும் உப்பு உரங்களும் |
| 14. பயிர்த் தொழில் | - | கார்நடக்கும் படிநக்கும். |

**15 முதல் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று கருத்துகள் அமையும்படி விடை எழுதுக** **4 X 3 = 12**

15. உணவு தினத்துன்று பள்ளியில் நடைபெறும் 'இன்றையை உணவுப் பழக்கமும் நோய்களும்' என்ற விழிப்புணர்வு முகாமை ஒட்டி சுவரொட்டியில் பதிவு செய்வதற்கு 3 கருத்துகளை எழுதுக.

16. 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' என்னும் பாரதிதாசனின் கூற்றுக்கு சிறு விளக்கம் தருக.

17. மதுரை நகரின் அழகை கான்சாகிபு கதைப்பாடலின் துணைகொண்டு வருணனைக் குறிப்பாக எழுதுக.

18. "மா மேயல் மறப்ப, மந்திகூர
பறவை படிவன வீழ, கறவை
கன்று கோள் ஒழிய கடியவீசி
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாள் நெடுநல்வாடை"

"ஆற்று வெள்ளம் நாளைவரத்
தோற்றுதே குறி – மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே" – முக்கூடற்பள்ளு

இவ்விரு பாடல்களையும் ஒப்பிட்டு வகுப்பு மலரில் வெளியிடுவதற்கான ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுக.

**19 முதல் 23 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.** **5 X 4 = 20**

19. நாராயணகுருவின் சமூகச் சீர்திருத்தச் செயல்கள் என்னும் தலைப்பில் ஆண்டு மலரில் வெளியிடக் கட்டுரைக் குறிப்பு எழுதுக.

20. இயற்கை வேளாண்மை குறித்து அறியும்பொருட்டு பள்ளியில் வருகை தரும் வேளாண் அதிகாரியிடம் வினவப் பொருத்தமான வினாநிரல் தயாரிக்க (நான்கு வினாக்கள் மட்டும்)

21. தமிழர்தம் விருந்தோம்பல் பண்பு குறித்துச் சிலப்பதிகாரம் வழிநின்று குறிப்பு எழுதுக.

22. 'மெல்லத்தமிழ் இனிச்சாகும்' என்பது போல் அன்றாடம் பேச்சு வழக்கில் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களின் தாக்கம் குறித்து விமர்சனம் தயாரிக்க.

23. உணவையே மருந்தாகப் பயன்படுத்துவதால் விளையும் நன்மைகள் குறித்து உணவு தினத்தில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுக் குறிப்பு எழுதுக.

**24, 25 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து கருத்துகள் அமையும்படி விடை எழுதுக** **2 X 5 = 10**

24. நவீன வாழ்க்கை முறையில் ஏற்பட்ட உணவு முறைகளும் மாற்றங்களும் என்ற தலைப்பில் ஆரோக்கிய இதழில் வெளியிடச் சிறு கட்டுரை எழுதுக.

25. 'சுற்றுப்புறத்தூய்மையில் மரங்களின் பங்கு' என்ற தலைப்பில் சுற்றுச்சூழல் தினத்தில் உரையாற்றுவதற்கான உரை தயாரிக்க.

**26 முதல் 28 வரையிலான வினாக்களுக்கு, இரு பக்கங்களுக்குக் குறையாமல் கட்டுரை வடிவில் விடை தருக.** **3 X 8 = 24**

26. நீங்கள் கண்டுகளித்த ஒரு நாட்டுப்புறக்கலை வடிவத்தின் தோற்றம், தனித்தன்மைகள் குறித்து எழுதுக.

அல்லது

'பேராசையின் பரிசு' என்ற நாட்டுப்புறக் கதை பமாமரமக்களின் இயல்பான சிந்தனைகளை எவ்வாறெல்லாம்

வெளிப்படுத்துகின்றன என்பது பற்றி எழுதுக.

27. அறிவியல் தினத்தில் நடைபெறும் கருத்தரங்கில் இணையதளமும் இளைஞர்களின் சீரழிவும் என்ற தலைப்பில் உரையாற்றுவதற்கான உரை தயாரிக்க.

அல்லது

இன்றைய கல்விமுறையில் இணையதளத்தின் பங்கு' என்ற தலைப்பில் பத்திரிகைத் தலையங்கம் எழுதுக.

28. சமூகச்சீர்கேடுகளுக்கு எதிராக மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகாமில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு தயாரிக்க.

அல்லது

சமூகச்சீர்திருத்தச் செம்மல் ஒருவரைக்குறித்த செய்திகளை வரலாற்றுக் கட்டுரை வடிவில் எழுதுக.

# பொதுத்தமிழ் - மாதிரி வினாத்தாள் - I
# மதிப்பீட்டுக் குறிப்புகள்

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப் பெண் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | ஈ. கைலாஷ் சத்தியார்த்தி | 1 | |
| 2 | இ. அளவோடு உண்ண வேண்டும் | 1 | |
| 3 | அ. வயல் வளம் | 1 | |
| 4 | ஆ. மேற்கு + காற்று | 1 | |
| 5 | ஆ. சுரதா | 1 | 10 |
| 6 | ஆ. அறியிவல் தொழில் நூட்பம் | 1 | |
| 7 | ஈ. ஏற்றப்பாட்டு | 1 | |
| 8 | இ பறவை | 1 | |
| 9 | அ. மருந்து | 1 | |
| 10. | இ. நாடகம் | 1 | |
| 11 | ஏர் எழுபது - கார்நடக்கும் படிநடக்கும். | 1 | |
| 12 | நம்மநிலம் - விஷமருந்துகளும் உப்பு உரங்களும் | 1 | |
| 13 | பொங்கலோ பொங்கல் - அள்ளமுடியாமல் சிதறிக் கிடக்கின்றன | 1 | |
| 14 | பயிர்த் தொழில் - முத்து முத்துச்சம்பா | 1 | 4 |
| 15 | • உணவே மருந்து<br>• எளிதில், செரிக்கும் வகையில் பழம், காய், பருப்பு, அரிசி போன்ற உணவு வகைகள்<br>• சமச்சீர் உணவும் அதிகமான நீரும் அருந்த வேண்டும் | 1<br>1<br>1 | 3 |
| 16 | • கல்வி அறிவு பெறாத மக்களுக்கு கல்வி அளிக்க வேண்டும்.<br>• சமதர்மம் தழைத்தோங்க வேண்டும்<br>• எல்லாரும் எல்லாவற்றையும் பெற்று இன்பமாக வாழ வேண்டும் | 1<br>1<br>1 | 3 |
| 17 | • மதுரை நகரின் அழகு<br>• வருணிக்கும் தன்மை<br>• கருத்துக் கோர்வை | 1<br>1<br>1 | 3 |
| 18 | • மழையின் அழகு<br>• உயிரினங்களின் துன்பநிலை<br>• இருபாடலின் ஒப்பீடு | 1<br>1<br>1 | 3 |
| 19 | • சமய - சமூக சீர்திருத்தம்<br>• தீண்டாமைக்கு எதிரான குரல்<br>• மனிதகுல முன்னேற்றம்<br>• சரியான வழிகாட்டல்கள் | 1<br>1<br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 20 | • நில, நீர், மர வளம் பெருக்குதல்<br>• நிலத்தை ஆறப்போடுதல்<br>• மண்வளக்காப்பை உறுதிசெய்தல்<br>• பயிர்களை நச்சுக் கலப்பின்றி விளைவித்தல் | 1<br>1<br>1<br>1 | <br><br><br>4 |
| 21 | • இன்முகம் - வரவேற்பு<br>• உணவு வழங்கல் - உபசரிப்பு<br>• கண்ணகியின் விருந்தோம்பல் பண்பு | 1<br>1<br>1<br>1 | <br><br><br>4 |
| 22 | • பிறமொழிக்கலப்பு<br>• மொழியின் இயல்புத்தன்மை<br>• இயல்புத் தன்மையிலிருந்துள்ள மாற்றம்<br>• விமர்சனப்பாங்கு | 1<br>1<br>1<br>1 | <br><br><br>4 |
| 23 | • முகமன், உணவே மருந்து<br>• சரி விகித உணவு<br>• காலந்தவறாது உண்ணுதல் | 1<br>1<br>2 | <br><br>4 |
| 24 | • துரித வாழ்க்கை<br>• துரித உணவுப்பயன்பாடு<br>• நோய்களின் ஆதிக்கம்<br>• கருத்துக்கோர்வை, வடிவம் | 1<br>2<br>2<br>1 | <br><br><br>5 |
| 25 | • மாசுக்கட்டுப்பாடு<br>• மரம் நடுதல்<br>• சுத்தமான காற்று<br>• வாழ்த்துரை வடிவம் | 1<br>1<br>1<br>2 | <br><br><br>5 |
| 26 | • கலை வடிவம்<br>• தனித்தன்மைகள்<br>• தோற்றம்<br>• நடத்தப்படும் காரணம்<br>அல்லது<br>• பிறரைத்தாழ்வாக எண்ணும் மனப்பாங்கு<br>• பேராசை போன்ற தீய குணங்கள்<br>கதை வெளிப்பாடு | 1<br>1<br>1<br>3<br><br>4<br><br>4 | |
| 27 | • இணையதளப் பயன்பாடும்<br>தீமைகளும்<br>• முறையான பயன்பாடு<br>• வடிவம் கருத்துக்கோர்வை<br>(அல்லது)<br>அதிக தகவல்கள்<br>கிடைப்பது எளிது<br>வீட்டிலிருந்தே தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்<br>பணப்பயன்பாடு குறைவு | 3<br><br>2<br>3<br><br>2<br>2<br>2<br>2 | <br><br><br>8 |

| | | | |
|---|---|---|---|
| 28 | • வடிவம் | 1 | |
| | • மேற்கோள் | 1 | |
| | • சமூகச்சீர்கேடுகள் - விளக்கம் | 4 | |
| | • எதிரான செயல்பாடுகள் | 1 | |
| | • சமூகச் சீருத்தச் செம்மல்களின் சான்றுகள் | 1 | 8 |
| | (அல்லது) | | |
| | • வரலாற்றுக்கட்டுரை | | |
| | • சமூக சேவை சுய அனுபவம் | | |
| | • பொது நல உணர்வு | | |
| | • தொண்டு உள்ளம் | | |

# வினா அடிப்படையிலான பகுப்பு (QUESTION BASED ANALYSIS)

## தமிழ் - வகுப்பு XII

| வினா எண் | அலகு | கற்றல் அடைவுகள் (Learning otucomes) | சிந்தனைத் திறன் (Thinking Skill) | வினாவகை | மதிப் பெண் | நேரம் (மணித்துளி |
|---|---|---|---|---|---|---|
| 1 | சமூகச்சீர்திருத்தம் | 5.1 | கருத்து அடைவு | புறவயம் | 1 | 1½ |
| 2 | என்றும் நலமுடன் | 4.3 | கருத்துப் பயனாக்கம் | புறவயம் | 1 | 2½ |
| 3 | வயலும் வாழ்வும் | 1.1 | கருத்துப் பயனாக்கம் | புறவயம் | 1 | 2½ |
| 4 | கலையும் பண்பாடும் | 2.1 | கருத்துப் பயனாக்கம் | புறவயம் | 1 | 2½ |
| 5 | சமூகச்சீர்திருத்தம் | 5.2 | கருத்துப் பயனாக்கம் | புறவயம் | 1 | 1½ |
| 6 | வயலும் வாழ்வும் | 1.2 | கருத்து அடைவு | புறவயம் | 1 | 1½ |
| 7 | என்றும் நலமுடன் | 4.6 | கருத்துப் பயனாக்கம் | புறவயம் | 1 | 2½ |
| 8 | அறிவியல் தமிழ் | 3.5 | கருத்து அடைவு | புறவயம் | 1 | 1½ |
| 9 | என்றும் நலமுடன் | 4.2 | கருத்துப் பயனாக்கம் | புறவயம் | 1 | 2½ |
| 10 | கலையும் பண்பாடும் | 2.2 | கருத்துப் பயனாக்கம் | புறவயம் | 1 | 2½ |
| 11 | வயலும் வாழ்வும் | 1.2 | கருத்துப் பயனாக்கம் | புறவயம் | 1 | 1½ |
| 12 | வயலும் வாழ்வும் | 1.2 | கருத்து அடைவு | புறவயம் | 1 | 1½ |
| 13 | வயலும் வாழ்வும் | 1.2 | கருத்துப் பயனாக்கம் | புறவயம் | 1 | 1½ |
| 14 | வயலும் வாழ்வும் | 1.2 | கருத்து அடைவு | புறவயம் | 1 | 3 |
| 15 | என்றும் நலமுடன் | 4.3 | கருத்துப் பயனாக்கம் | குறுவினா | 3 | 5 |
| 16 | சமூகச்சீர்திருத்தம் | 5.5 | கருத்து அடைவு | குறுவினா | 3 | 4 |
| 17 | கலையும் பண்பாடும் | 2.5 | கருத்து அடைவு | குறுவினா | 3 | 4 |
| 18 | அறிவியல் தமிழ் | 3.6 | கருத்துப் பயனாக்கம் | குறுவினா | 3 | 5 |
| 19 | சமூகச்சீர்திருத்தம் | 5.5 | கருத்து அடைவு | குறுவினா | 3 | 7 |
| 20 | வயலும் வாழ்வும் | 1.5 | கருத்து அடைவு | குறுவினா | 4 | 7 |
| 21 | கலையும் பண்பாடும் | 2.8 | கருத்து அடைவு | குறுவினா | 4 | 7 |
| 22 | அறிவியல் தமிழ் | 3.2 | கருத்துப் பயனாக்கம் | குறுவினா | 4 | 7 |
| 23 | என்றும் நலமுடன் | 4.2 | கருத்துப் பயனாக்கம் | குறுவினா | 4 | 5 |
| 24 | என்றும் நலமுடன் | 4.2 | கருத்து அடைவு | குறுவினா | 5 | 8 |
| 25 | வயலும் வாழ்வும் | 1.4 | கருத்து அடைவு | குறுவினா | 5 | 8 |
| 26 | கலையும் பண்பாடும் | 2.3 | கருத்து அடைவு | கட்டுரை வினா | 8 | 20 |
| 27 | அறிவியல் தமிழ் | 3.4 | கருத்து அடைவு | கட்டுரை வினா | 8 | 20 |
| 28 | சமூகச்சீர்திருத்தம் | 5.6 | கருத்துப் பயனாக்கம் | கட்டுரை வினா | 8 | 20 |
| | **மொத்தம்** | | | | **80** | **150** |